[திரு. சி. பொன்னையன்] [2002 மார்ச் 27

147. இந்த வரவு-செலவுத் திட்டத்தை உருவாக்குவதில் முழு ஈடுபாட்டினையும் ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் போற்றுதற்குரிய வழிகாட்டுதலையும் நல்கிய மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என் நெஞ்சார்ந்த நன்றியினை உரித்தாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

148. நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள், மாநிலத்தின் நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களில் நிலவிடும் வறுமைப் பிணியைப் போக்கிடவும், வேலையில்லாத் திண்டாட்டத்தை நீக்கிடவும் உறுதிபூண்டுள்ளார்கள். தமிழ்நாட்டை வளர்ச்சிப் பாதையில் மீண்டும் நிலைநிறுத்தி, இந்தியாவிலேயே அனைத்துத் துறைகளிலும் தலைசிறந்த மாநிலமாகத் தமிழகத்தை உயர்த்திட மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் தீவிர செயல் திட்டங்களை மேற்கொண்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய தொலைநோக்குச் சிந்தனைகள் ஆக்கபூர்வமான செயல் திட்டங்களாக மலர்வதற்கு இந்த வரவு-செலவுத் திட்டம் வழிவகுக்கும்.

149. இந்த நிதிநிலை அறிக்கையைத் தயாரிப்பதில் பேருதவியையும், பெரும் ஒத்துழைப்பையும் நல்கிய நிதித் துறைச் செயலர் திரு. ஆர். சந்தானம், இ.ஆ.ப., அவர்களுக்கும், அயராது பணியாற்றிய இத்துறையைச் சேர்ந்த பணியாளர் குழுவிற்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

150. 2002-2003 ஆம் ஆண்டுக்கான ஆண்டு நிதிநிலை அறிக்கையை ஏற்றுக்கொள்ளுமாறு அவையினர் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

வணக்கம்.

(முற்பகல் 11-40)

## 2. முன்பண மானியக் கோரிக்கைகள், 2002-2003, அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2002-2003 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகள். மாண்புமிகு நிதி மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர்.

2002 மார்ச் 27]

***மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2002-2003 ஆம் ஆண்டின் செலவிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளைப் பேரவைமுன் வைக்கிறேன்:

## 2002-2003 ஆம் ஆண்டு 'உடனடி செலவுக்கான' மானியக் கோரிக்கைகள்

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) வருவாய் | மூலதனம் |
|---|---|---|
| 1. மாநிலச் சட்டமன்றம் | 2,95,65 | |
| 2. ஆளுநர் மற்றும் அமைச்சரவை | 2,28,85 | |
| 3. நீதி நிருவாகம் | 34,72,58 | |
| 4. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | 88,59,58 | 2,83,97 |
| 5. வேளாண்மைத் துறை | 1,49,94,21 | 92,47 |
| 6. கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – கால்நடை பராமரிப்பு | 41,90,14 | 1 |
| 7. கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை – மீன்வளம் | 10,08,91 | 56,31 |
| 8. கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை- பால் வளம் | 3,46,98 | |
| 9. பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை | 30,83,48 | 33,85 |
| 10. வணிக வரித் துறை-வணிக வரிகள் | 60,04,78 | |
| 11. வணிக வரித் துறை-முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு | 19,55,05 | |
| 12. கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை | 6,42,71,54 | 2,66,06 |

[திரு. சி. பொன்னையன்] [2002 மார்ச் 27

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) வருவாய் | மூலதனம் |
|---|---|---|
| 13. எரிசக்தித் துறை | 5,82,63,52 | 50,00,00 |
| 14. சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை | 24,22,09 | 24,42,05 |
| 15. நிதித் துறை | 1,14,66,29 | 5,48,43 |
| 16. கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கைத்தறி மற்றும் துணி நூல் | 22,44,48 | 1 |
| 17. கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த் துறை-கதர், கிராமத் தொழில்கள் மற்றும் கைவினைப் பொருட்கள் | 14,17,69 | |
| 18. மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை | 3,10,94,78 | 5,06,50 |
| 19. உயர் கல்வித் துறை | 1,98,19,14 | 14,71 |
| 20. நெடுஞ்சாலைகள் துறை | 1,07,01,34 | 1,79,77,07 |
| 21. உள் துறை-காவல் | 2,92,58,05 | 41,92,29 |
| 22. உள்துறை-தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் | 14,72,12 | 1,32,32 |
| 23. உள்துறை-சிறைச்சாலைகள் | 14,81,88 | 83,84 |
| 24. உள்துறை-இயக்கூர்திகள் குறித்த சட்டங்கள்-நிருவாகம் | 11,35,98 | |
| 25. வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை | 27,14,73 | 45,49,29 |
| 26. தொழில் துறை | 9,94,61 | 11,96,49 |
| 27. செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-செய்தி மற்றும் விளம்பரம் | 6,61,49 | 12,50 |
| 28. செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-சுற்றுலா | 7,99,27 | 16,77 |

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

2002 மார்ச் 27] [திரு. சி. பொன்னையன்]

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) வருவாய் | மூலதனம் |
|---|---|---|
| 29. செய்தி மற்றும் சுற்றுலாத் துறை-எழுதுபொருள் மற்றும் அச்சு | 14,80,68 | 2 |
| 30. தகவல் தொழில்நுட்பவியல் துறை | 2,56,29 | |
| 31. தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை | 44,42,32 | 6,06 |
| 32. சட்டத் துறை | 2,11,95 | |
| 33. நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை | 2,65,71,57 | 2,31,06,29 |
| 34. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை | 5,48,38 | |
| 35. திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை | 7,97,21 | 1,42,42 |
| 36. மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை | 6,36,21 | |
| 37. பொதுத் துறை | 19,89,35 | |
| 38. பொதுப் பணித் துறை | 1,28,63,06 | 97,48,32 |
| 39. வருவாய்த் துறை | 2,06,59,82 | 6,25,01 |
| 40. ஊரக வளர்ச்சித் துறை | 4,26,31,98 | 9,50,18 |
| 41. பள்ளிக் கல்வித் துறை | 10,40,16,29 | 1,31,91 |
| 42. சிறுதொழில்கள் துறை | 11,10,60 | 13,04 |
| 43. சமூக நலன் மற்றம் சத்துணவுத் திட்டத் துறை | 1,02,77,88 | |
| 44. தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-தமிழ் வளர்ச்சி பண்பாடு | 10,41,07 | |
| 45. தமிழ் வளர்ச்சி-பண்பாடு மற்றும் அறநிலையத் துறை-இந்து சமய அறநிலையத் துறை | 6,83,19 | 12,36 |

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
சட்டமன்றப் பேரவை
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

| கோரிக்கை | (ரூபாய் ஆயிரத்தில்) வருவாய் | மூலதனம் |
|---|---|---|
| 46. போக்குவரத்துத் துறை | 37,68,73 | 30 |
| 47. இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை | 6,53,48 | |
| 48. ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக் கால நன்மைகளும் | 7,97,84,23 | |
| 49. இயற்கை சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு | 28,66,95 | |
| பெருமொத்தம் | 60,19,50.45 | 7,21,40,85 |

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (28-03-2002) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.*

பின்னர், பேரவை *முற்பகல் 11-44* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

* * * * *

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMILNADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS